**இணைப்பு 01**

**இலங்கை தகவல், தொடர்புசாதன தொழில்நுட்பச் சேவை அலுவலர்களின் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலர்களின் தகவல்களை இணையத்தள விண்ணப்பத்தில் (Online Application) பதிவிடுவதற்கான ஆலோசனைகள்**

01. http://203.94.94.214/cstransapp/ எனும் இணையத்தள முகவரியினூடாக இணையத்தள மென்பொருளை (Online Application) பெற முடியும். கைத்தொலைபேசியினூடாகவும் (Smart Phone) இவ்விணையத்தள மென்பொருளை (Online Application) பெறலாம்.

02. இலங்கை தகவல், தொடர்புசாதன தொழில்நுட்பச் சேவை அலுவலர்களின் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அலுவலர்களின் வருடாந்த இடமாற்றம் சம்பந்தமாக விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்திருக்கும் மற்றும் அல்லாத அனைத்து அலுவலர்களும் தனது தனிப்பட்ட தகவல்களை இவ்விணையத்தள மென்பொருளில் பதிவிடுவது அவசியமானதாகும். 15.05.2018 ஆந் திகதி அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட, புதிய அலுவலர்களின் தகவல் ஏற்கனவே இணையத்தள மென்பொருளிற்க்கு (Online Application) சேர்க்கப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட தகவல்களில் வேறுபாடு உள்ளதெனில் புதுப்பிக்கப்பட வேண்டும்.

03. மேற்கூறப்பட்ட இரு சேவைகளிலும் வருடாந்த இடமாற்றம் சம்பந்தமாக விண்ணப்பிக்கும் அலுவலர்களின் வருடாந்த இடமாற்ற விண்ணப்பம் இவ் மென்பொருளினூடாக (Online Application) பிரதியிட்டு பெறப்படுவதுடன், அப்பிரதியினை திணைக்கள தலைவரின் பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பிரிவிற்கு 10.08.2018 ஆந் திகதிக்கு முன் பெறப்படுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

04. சம்பந்தப்பட்ட பிரதியிடப்பட்ட விண்ணப்பப்படிவம் திணைக்கள தலைவரிடம் பெறப்பட்டபின் வருடாந்த இடமாற்றம் சம்பந்தமாக குறிப்பிட்ட பரிந்துரை, பிரதியிடப்பட்ட விண்ணப்பப்படிவதில் குறிப்பிடப்பட வேண்டும் அத்துடன், திணைக்கள தலைவரிடம் கொடுக்கப்பட்டுள்ள இடைமுகம் (Interface) ஊடாக **குறிப்பிட்ட பரிந்துரை இவ் மென்பொருளினூடாகவும் (Online Application) கட்டாயமாக** வழங்கப்பட வேண்டும்.

05. மேலும் இவ்விரு சேவைகளினதும் வருடாந்த இடமாற்ற விண்ணப்ப அட்டவணை – 2019 (இ.சே./வ.இ.மா./02) மற்றும் இணைந்த சேவைகள் சுற்றறிக்கை : 03/2018 இல் கூறப்பட்டுள்ள இடமாற்ற விண்ணப்பம் (இ.சே./வ.இ.மா./01) அனுப்புதல் அவசியமற்றது.

06. மாவட்டத்தில், ஒரு சேவை நிலையத்தில், சேவை நிலையத்தினூடாக செயற்படும் காரியாலயங்களில் அல்லது காரியாலயங்களில் 05 வருடத்திற்கு மேல் சேவையிலிருக்கும் அனைத்து அலுவலர்களின் தகவல்களும் (இ.சே./வ.இ.மா./03) இம்முறை இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பெறப்பட்ட பிரதியினை திணைக்கள தலைவரின் பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பிரிவிற்கு 10.08.2018 ஆந் திகதிக்கு முன் பெறப்படுமாறு ஆவணம் செய்தல் வேண்டும்.

07. அனைத்து அலுவலர்களும் அவர்கள் தொடர்பான உண்மைத் தகவல்களை அவ்விண்ணப்பத்தில் அறியத்தருதல் அவர்களின் கடமையாவதுடன், அத்தகவல்கள் அனைத்தும் உண்மைத் தகவல்கள் என அவ்வலுவலர்கள் தற்போது சேவையாற்றும் திணைக்களத்தின் திணைக்கள தலைவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும் அத்தகவல்கள் அலுவலரின் தனிப்பட்ட கோவையில் மீள் பரிசீலனை செய்யப்படுமிடத்து அலுவலர்கள் தொடர்பான தவறான தகவல்களை அறியத்தருதலை தவிர்க்கவும்.

08. இது தொடர்பாக மேலதிக தகவல்களுக்கு கீழ்கூறப்பட்டுள்ள தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு ஆலோசனைகளை பெறலாம்.

- திருமதி. கே.எம்.கே.கே. குலதுங்க (உதவிப்பணிப்பாளர்) -0112 693 769
- திரு. ரஞ்சித் திசாநாயக (தொழில்நுட்ப சேவை அலுவலர்) - 0715 253 192